தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

# உலகத்தமிழ்

இதழ் - 1 | திருவள்ளுவராண்டு 2050 | 11.12.2019

## பிறர் கண்களுக்குப் புலப்படாததையும் கண்டறியக் கூடியவர்தான் தலைவர்

***மா**ண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராசன் அவர்கள் இந்திய அலுவலர்கள் சங்கத்தின் 110-வது ஆண்டு மாநாட்டின் தொடக்க விழாவில் பங்கேற்று ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் தமிழாக்கம் பின்வருமாறு:-*

*தலைசிறந்த சந்தைப் பொருளாதார ஆலோசகரான சி. கே. பிரஹலாத் என்பவர், "தற்போது நாம் "GIVE" யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; அதாவது, G (GOVERNANCE) என்பது நல்ல நிருவாகத்தையும் (INNOVATION) என்பது புதுமையாக்கத்தையும் V (VALUE) என்பது நன்மதிப்பையும் E (ENTREPRENEURSHIP) என்பது தொழில் முனைப்பையும் குறிக்கும்" எனக் குறிப்பிட்டார். மேலாண்மை மற்றும் ஆளுகை தொடர்புடைய அகராதிகளில் "GIVE" யுகம் குறித்த இக்குறிப்பு இடம்பெற்றுவிட்டது.*

*ஒரு காலத்தில், பெருநிறுவன உலகில் ஆளுகை குறித்த புதிய நெறிமுறைகளை வகுத்துரைப்பதற்கு கணக்காளர்கள் முயன்றார்கள். அப்போதுதான் முதன்முறையாக, "ஆளுகை" என்னும் சொல் பெருநிறுவன உலகின் அகராதிகளிலும் "மேலாண்மை" என்னும் கருத்து ஆளுகை உலக அகராதிகளிலும் இடம் பெறத்தொடங்கின. ஏன் என் மனதில் இது மிகத் தெளிவாகப் பதிந்தது என்றால், 1999 முதல் 2004 அல்லது 2005க்கு இடைப்பட்ட காலத்தில் தான், பல பழைய சொற்களுக்கு புதிய பொருள் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.*

*பெரு நிறுவன உலகில் அந்தக் காலகட்டத்தில் தான் பெரு நிறுவன உலகின் மொத்த அமைப்பையும் மாற்றும் வகையில் மூன்று சொற்றொடருகளுக்கு மிகவும் வித்தியாசமான பொருள்விளக்கம் அளிக்கப்பட்டன. அது போலவே, ஆளுகை குறித்தும், பல சொற்களுக்கு வித்தியாசமான பொருள்விளக்கங்கள் அளிக்கப்பட்டன. அக்காலத்தில் எல்லைகள் மறுவரையறை செய்யப்பட்டன. அடுத்த இரண்டு நாட்களுக்கு நான் அந்த எல்லைகள் குறித்து கற்றேன். பல பொருண்மைகள் குறித்து நாம் இங்கு விவாதிக்க உள்ளோம்.*

வளரும்...

**"தெய்வம் நீ என்று உணர்"**

*-பாரதியார்*





**திரு.க.பாண்டியராசன்**

தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப்பண்பாடுத்துறை அமைச்சர்



தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் - கடற்கரை கோயில், மாமல்லபுரம்

## ஆசிரியர் பகுதி

உலகளாவிய சிந்தனையோடு தமிழர்கள் தொடங்குகிற இலக்கியத் தொடர்கள் எல்லாம் உலகம் என்றே தொடங்கும். சங்க இலக்கியம், காப்பியங்கள், கம்பர், பெரிய புராணம் தொடங்கும்போதே உலகத்தைப் பற்றி உலகம் என்று தொடங்கும்போது நாம் பெருமிதமடைகின்றோம்.

உலக நாடுகளில் 167 நாடுகளில் தமிழர் கலை, பண்பாட்டின் விழுமியத்தின் துண்டு துணுக்குகள் சிதறிக் கிடப்பதைப் பார்க்கும்போது நாம் சிலிர்த்துப் போகிறோம்.

"தேமதுரத் தமிழோசை திசையெல்லாம் பரவுதல் வேண்டும்"

என்ற பாரதியாரின் கனவு மெய்ப்பட வேண்டும். இந்நன்னாள் தேசியக் கனலாக ஒளி வீசிய பாரதியாரின் பிறந்தநாள் பெருமங்களமாகும்.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி அமைச்சர் கருத்தில் தோன்றிய உலகத்தமிழ் என்ற இணைய இதழ் இந்நன்நோக்கத்தில் தொடங்கப்பெறுகிறது.

சங்கத்தமிழ் போல, மும்மைத் தமிழ் போல, செம்மொழித் தமிழ் போல உலகத்தமிழ் என்பதும் நமக்கு உணர்வூட்டும் அடைமொழியாகும்.

வெல்க தமிழ் ! வாழ்க வையகம்!

"தொன்மையானவையே எனினும் இன்றும் உயிரூட்டம் உள்ளவையாய் இலங்கும் இந்த (சங்க இலக்கிய) அகப்பாடல்களைப் போன்ற நயம் வாய்ந்தவை இந்திய இலக்கியங்கள் வேறு எவற்றிலும் இல்லை. அப்பாடல்கள் கூறும் வாழ்க்கை நெறியிலும், விளக்கும் நிகழ்ச்சிகளிலும் சிறந்த செம்மொழி இலக்கியத்தின் பின்வரும் கூறுகள் உள்ளன: காதலோடு கனிவும் பண்பாடும்; வெளிப்படைக் கூற்றுக்களோடு உள்ளுறை, இறைச்சி, அங்கதம் ஆகியவையும்; தலைவன், தலைவி பெயர் சுட்டப்படாவிடினும் ஓவியம் போன்ற நுண்ணிய வண்ணனை; அடிகள் சில அவை சுட்டும் பொருளோ பெரிது. தமிழர் அறிவுத்திறனின் மிகத் தொன்மையான எடுத்துக்காட்டு இவ்வகப்பாடல்கள்; அது மட்டுமன்று கடந்த ஈராயிரம் ஆண்டு தமிழ் இலக்கியப் படைப்பில் இவற்றை விஞ்சுவன இல்லை."

—அமெரிக்கத் தமிழ் அறிஞர் ஏ.கே. இராமானுசம்

# உலகளாவிய தமிழ் அமைப்புகள்



முனைவர்

வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர்

தமிழ் இணைப்பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

தமிழர்கள் தொன்று தொட்டு அமைப்பின் வழியாக ஒன்று கூடி நல்ல செயல்களில் ஈடுபட்டனர். சங்கம் என்ற அமைப்பே புலவர்கள் ஒன்று கூடி தமிழினை வளர்த்து இன்று சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படுகின்ற தமிழரின் கருவூலத்திற்கும் தொகுப்பு நூல்களுக்கும் இந்த அமைப்பு முறையே காரணமாக இருந்தது.

பழந்தமிழ் இலக்கியங்களில் உலகம் என்ற சொல் இன்றுள்ள விரிந்த பொருளை உள்ளடக்கியது என்றால் அது ஐயமே. ஆனால், உலகமக்கள் அனைவரும் போற்றக்கூடிய சிறந்த சிந்தனைகளை தமிழ்ச் சான்றோர் வழங்கியுள்ளனர். உலகம் எனத் திருமுருகாற்றுப் படையும் உலகு எனத் திருக்குறளும் நனந்தலை உலகம் என பிற இலக்கியங்களும் உலகு என்ற சொல்லைக் கையாண்டுள்ளன.

இவ்வகையில் பழங்காலத் தமிழர்கள் முதல் இன்று வரை அமைப்பு வழியாகச் செயல்பட்டமைக்கான பல காரணங்கள் உண்டு. சமுதாயமே ஒரு அமைப்பின் வழியே இயங்கி வருகிறது.

.....வளரும்

## ஔவையார்

### ஆத்திசூடி
ATTISUDI

آثي سودي

阿媞邱立

ആത്തിച്ചൂടി

आत्तिचूड़ी

ఆత్తిఛూడి

### கடவுள் வாழ்த்து

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம், யாமே.

### Invocation

LET us worship and praise continually the god who is dear to that being who wears a garland made of the flowers of the Atti tree.

استدعاء
اسمح لنا أن نعبد ونمدح باستمرار
الإله العزيزة على ذلك الكائن.
الذي يرتدي إكليلًا مصنوعًا
من زهور شجرة العطي

讓我們不斷的祈禱及歌頌我們的敬愛的身著阿緹花環的神

ആത്തിമാലയണിഞ്ഞ
ദൈവത്തെ നിരന്തരമായി
പുകഴ്ന്നു തൊഴാം.

हम ऐसे भगवान् की स्तुति करें जो 'आत्ति' की माला पहने विराजित हों ।

ఆత్తిపూల హారము ధరించిన
భగవంతున్ని మేమందరు గొప్పగా
పొగడుతూ ప్రార్థిద్దాం





பிரெஞ்சு கலைக்கழகம்

**முனைவர் ந.அருள், இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை**



பிரான்சு என்ற ஆங்கில ஆறெழுத்துக்களின் முதல் எழுத்துகளைக் கூட்டினால் பண்பாடு, நாகரிகம், பெருமிதம், அறிவார்வம், நல்லிணக்கம், ஒருமைப்பாடு என்ற ஆறு தூண்களும் எழுந்து அமைந்த எழில் நாடுதான் பிரான்சாகும்.

எல்லோரும் சமம், எல்லோர்க்கும் உரிமை, எல்லோரும் உடன் பிறந்தவர்கள் என்ற மூன்று மணிமொழிகளை மொழிகளாக ஒலித்த பெருமை பிரெஞ்சு புரட்சியின் விளைவாகும். அமெரிக்கா நாட்டுக்கு, விடுதலைத் தாயின் வெண் சிலையை வழங்கிய பெருமை பிரான்சையே சேரும். புரட்சியின் விளைவாகப் பூத்த புதுமைகள் பல.

எப்கிரிகாயிர் என்பவரால் திட்டமிட்டு அமைக்கப்பெற்ற ஆய்வரங்கம் தான் பிரெஞ்சுக் கலைக்கழகம் ஆகும். இந்நிறுவனத்தின் இலச்சினையாக ரோமானியக் கலைமகள் மினர்வா வடிவம் இலங்குகிறது.

மொழி, கலை, அறிவியல் தொல்பொருள் மேம்பாட்டுக்காகப் பிரெஞ்சு அரசின் அரவணைப்போடு அமைந்த இந்நிறுவனத்தை உலக நாடுகளெல்லாம் நம் ஆய்வரங்கத்துக்கு இதுதான் தாய்க்கழகம் என்று சுட்டிக் காட்டுவார்கள்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமையும், கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ் என்று நாம் இன்றுவரை கொண்டாடுவதும் தமிழ்ச் சங்கத்தின் பெருமையைச் சுட்டிக் காட்டும்.

பேரறிஞர் அண்ணா இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டில் பிரெஞ்சு அகாடமியைப் போல உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தை உருவாக்குவோம் என்று முழக்கம் செய்தார். அந்தக் கனவு தான் சென்னை, தரமணியில் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனமாக உருவாக்கப்பட்டுள்ளது. அண்மையில் நான் பிரான்சு சென்றிருந்த போது அகாதமியைப் பார்வையிட்டு அதன் அமைப்பு முறைகளை அறிந்து மகிழ்ந்தேன்.

தொடரும்...

# தமிழ்ச் சங்கங்கள்

### தலைச்சங்கம் அல்லது முதல் சங்கம்

கி.மு. 5000 - கி.மு. 3000 வரை.

பழம்பாண்டிய மன்னனான "காய்சினவழுதி" என்பவனால் முதல் சங்கம் நிறுவப்பட்டது. பழம் பாண்டி நாட்டின் தலைநகராக குமரியாற்றங்கரையில் வீற்றிருந்த தென் மதுரையில் முதல் தமிழ்ச்சங்கம் அமைத்து தமிழை ஆய்ந்தனர். மன்னன் காய்சினவழுதி முதல் முதலாம் கடுங்கோன் வரை, 89 பாண்டிய மன்னர்கள் அச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்து தமிழை ஆய்தனர். அவர்களின் அகத்தியர் தலைசிறந்த புலவராய்த் திகழ்ந்தார் தென்மதுரையை தலைநகராகக் கொண்டு முதல் சங்கம் கி.மு. 5000 முதல் கி.மு. 3000 வரை ஏறக்குறைய 2000 ஆண்டுகள் சிறப்புடன் வளர்ச்சி பெற்று வந்தது.

### இடைச்சங்கம் அல்லது இரண்டாம் சங்கம்

கி.மு. 3000 முதல் 1500 வரை

முதல் சங்கமிருந்த தென்மதுரை அழிந்து போகவே மீண்டும் சங்கத்தை உருவாக்க எண்ணிய "பாண்டிய மன்னம் கடுங்கோன்" என்பவன் கபாடபுரத்தை அமைத்து அதில் இடைச்சங்கத்தை நிறுவி தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தான். இச்ச்கம் சுமார் கி.மு. 3000 முதல் கி.மு 1500 வரை ஏறக்குறைய 1500 ஆண்டுகள் நிலை பெற்றிருந்தது. இச்சங்கத்தில் அவைப் புலவர்களாக தொல்காப்பியர், கீரந்தையர் போன்ற பெரும் புலவர்களும் வீற்றிருந்தனர். இவர்களுக்கு அகத்தியம், மாதிரி நூலாகத் துணைபுரிந்தது. வால்மீகி ராமாயணம், வியாச பாரதம் போன்றவைகளின் வாயிலாக கபாடபுரத்தைப் பற்றிய பல செய்திகளை அறிய முடிகிறது. மேலும் கபாடபுரம் பாண்டியனின் தலைநகரமாக மட்டுமல்லாமல் ஒரு சிறந்த துறைமுகமாகவும் திகழ்ந்தது.

### கடைச்சங்கம் அல்லது மூன்றாம் தமிழ்ச்சங்கம்

கி.மு. 1500 முதல் கி.பி. 250 வரை


கபாடபுரம் அழிவுற்ற அதேவேளை இடைச் சங்மும் சேர்ந்தே அழிவுற்றது. அழிவுற்ற பாண்டி நாட்டையும் தமிழ் சங்கத்தையும் மறுபடியும் உருவாக்க எண்ணிய "முடத்திருமாறன்" என்னும் பாண்டிய மன்னன் தன்னாட்டிற்குள் கூடல் என்னும் மதுரை மாநகரை உண்டு பண்ணி மூன்றாம் தமிழ்ச் சங்கமான கடைச்சங்கத்தை உருவாக்கினான். கடைச்சங்க காலம் கி.மு. 1500 முதல் கி.பி. 250 வரை. இப்பொழுது உள்ள மதுரையில் கடைச்சங்கம் நிலைப்பெற்றிருந்தது என இறையனார் அகப்பொருளுரை கூறுகிறது. இச்சங்கத்தைப்பற்றி செய்திகள் நமக்கு நிறையக் கிடைத்துள்ளன. கடைச்சங்கத்தில் 49 அவைப் புலவர்கள் தமிழாய்ந்துள்ளனர். அவர்கள் நக்கீரன், நல்லந்துவனார், சீத்தலைச்சாத்தனார் போன்றவர்கள் தலைசிறந்தவர்கள் ஆவார். கபிலர், பரணம் போன்ற பெரும்புலவர்களும் கடைச்சங்ககாலத்தவர்களே. இச்சங்கத்தில் தான் திருவள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றினார். சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளும் இச்சங்கத்தின் இறுதிக் காலத்தில் வாழ்ந்தவரே. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கடைச்சங்கத்தில் இயற்றப்பட்டவைகளே.

### நான்காம் தமிழ்ச்சங்கம்

கி.பி. 1901 முதல்

பிலவ ஆண்டு ஆவணித் திங்கள் 13-ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை சித்திரை மீன் கூடிய நன்னாளில் 14. 09.1901 பகல் 1.30 மணிக்கு மேல் 2.45 மணிக்குள் மதுரை சேதுபதி உயர்பள்ளி மண்டபத்தில் நான்காம் தமிழ்ச் சங்கம் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் நிறுவப்பட்டது. அதே நன்னாளில்

1. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை,
2. பாண்டியன் புத்தகசாலை
3. நூலாராய்ச்சி சாலை என்பனவும் தொடங்கப்பெற்றன.






உலகின் மொத்த நாடுகள் - 239

தமிழ் மக்கள் வசிக்கும் நாடுகள் - 167

உலகத் தமிழ் இதழ் தொடங்குவதற்கு காரணமான குழுக் கூட்டம்

நிகழ்வுகள்

11.12.2019












## நிகழ்வுகள்




11.12.2019












ஜாம்பியா - லுசாக்காவில் இலக்கியச் சுடர் வழக்கறிஞர் திரு.த.இராமலிங்கம் அவர்கள் "மகாகவி பாரதியார்" பற்றி **11.12.2019** அன்று உரையாற்றுகிறார்.


## நிகழ்வுகள்

**13.12.2019** *மற்றும்* **14.12.2019**


















## இந்த வார நிகழ்வுகள்

**14.12.2019** மற்றும் **15.12.2019**







